உடனடியாக மேற்கொள்ளப்படும். ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 470, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

470—

கீழ்அரசம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

*10922—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் தாலுகா, கீழ்அரசம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தாலுக்கா, கீழ்அரசம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்கும் திட்டத்தின் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இக்கிராமத்திற்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு, இந்த திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை பொறுத்தவரையில் எல்லா பகுதி மக்களுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுக்க வல்ல அரசாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இன்றைய நிலையில் கிராமப்பகுதி மக்கள் எல்லாம் வேண்டுவது நல்ல சாலை வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி போன்றவை தான். இந்தத் திட்டங்களை எல்லாம் நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருக்கிறபோது பார்த்தேன். இரண்டாண்டு காலத்தில் ஒன்றும் செய்யப்படவில்லை. இந்த கீழ் அரசம்பட்டு கிராமத்தைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அப்போது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி பற்றிய துணைக் கேள்விதான் கேட்கலாம் நீண்ட உரையாக நிகழ்த்தக் கூடாது, கேள்வியாகக் கேளுங்கள்.

1993 ஏப்ரல் 26]

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்தில் ஹைகோர்ட்டில் ரிட் போட்டு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டாமல் நின்று விட்டது. அதற்காகத்தான் கேள்வி எழுப்பினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையால் அந்த ஸ்டே எல்லாம் முறியடிக்கப் பட்டு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பாது காக்கப்பட்ட நீர் வழங்க மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஏறத்தாழ 5,000 மக்கள் தொகை கொண்ட அந்தக்கிராமத்தில் கொடுத்ததற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன் றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணி ஏறத்தாழ 4 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது என்ற காரணத் தாலும், தற்போது மக்கள் தொகை அதிகமாக விரிவடைந்து இருக்கிற காரணத்தாலும், மேலும் அதிகமான பாயிண்டுகள், அதிகமான குழாய் இணைப்புகள் ஏற்படுத்தித் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 471 திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

471—

நரசிங்கபுரம்—பட்டியாக்கவுண்டனூர் சாலையைத் தார்ச்சாலை யாக மாற்றும் திட்டம்.

*11111—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் நரசிங்கபுரத்திலிருந்து கோடங்கிப்பட்டி வழியாக பட்டியாக்கவுண்டனூர் வரை உள்ள பழுதடைந்த சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், நரசிங்கபுரம்—கோடங்கிப்பட்டி வழியாக பட்டியாக்கவுண்டனூர் வரை உள்ள சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.